**CNR No. TNVL1E-000176-2021**

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் மற்றும்

சார்பு நீதிமன்றம்,வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.

முன்னிலை : B. ராஜா, பி.ஏ., பி.எல்.,

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயர் மற்றும் சார்பு நீதிபதி, வாணியம்பாடி

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ம் நாள் வியாழக்கிழமை

(2058 திருவள்ளுவர் ஆண்டு, ஸ்ரீ பராபவ வருடம் சித்திரைத் திங்கள் 03ம் நாள்)

**மோட்டார் வாகன விபத்து அசல் மனு எண்.54/2021**

1. ராஜகோபால்
த/பெ கோவிந்தசாமி
2. விஜயநிர்மலா
க/பெ. நடராஜன்
3. லட்சுமி
க/பெ. வெங்கடேசன்
4. தனபாக்கியம்
க/பெ. பிச்சாண்டி
5. சண்முகம்
த/பெ. கோவிந்தசாமி
6. நளினி
க/பெ. சத்தியவதனம்
7. கிருஷ்ணன்
த/பெ. கோவிந்தசாமி .... மனுதாரர்கள்

/எதிர்/

1. ஆறுமுகம்
த/பெ. கோவிந்தசாமி
2. நியு இந்தியா அஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
வேலூர். .... எதிர்மனுதாரர்கள்

மனுவானது கடந்த 01.04.2026ம் தேதி, இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. வி.வி. குணசேகரன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதார் தோன்றாதரப்பினர் நிலையில் வைக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.அன்பழகன் அவர்கள்

ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்துள்ள மனுக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்த பின், இருதரப்பு வாதங்களையும் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

**<u>உத்தரவு</u>**

**01)** கடந்த 17.11.2020ம் தேதியில் நடந்துள்ள மோட்டார் வாகன சாலை விபத்தில் இறந்துள்ள சின்னம்மாள் என்பவரது இறப்பு தொடர்பாக, பல்வேறு தலைப்புகளின் கீழ், மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகையாக மொத்தம் ரூ.25,00,000/-ஐ, பின் வட்டியுடன் எதிர்மனுதாரர்களிடமிருந்து பெறுவதற்காக, மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 166ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02) <u>மனுவின் சுருக்கம்</u> :-**

கடந்த 17.11.2020ம் தேதி, காலை 10.00 மணியளவில் விபத்தில் இறந்துள்ள சின்னம்மாள் என்பவர் வாணியம்பாடி தாலுக்கா, நியு இந்திரா நகரில் உள்ள 1ம் எதிர்மனுதாருக்கு சொந்தமான டிராக்டர் செட் அருகில் நடந்து சென்றுள்ளார்.

அச்சமயம், அவருக்கு பின்னால், TN 23 BX 8271 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவுடனும் ஓட்டிக்கொண்டு வந்து, மேற்படி சின்னம்மாள் என்பவர் மீது மோதி சாலை விபத்தை ஏற்படுத்தியுள்ளார். விபத்து காரணமாக மேற்படி சின்னம்மாள் உடல் முழுவதும் பலத்த காயம் அடைந்து, வாணியம்பாடி விஜயா ஆர்தோ கேர் மருத்துவனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டுள்ளார்.

பின் நாட்டுமருந்து சிகிச்சை எடுத்து கொண்டு, வாணியம்பாடி அரசு மருத்துவமனை மற்றும் வாணியம்பாடி ரப்பா மருத்துவனை ஆகியவற்றில் மேற்படி சின்னம்மாள் சிகிச்சை பெற்றுள்ளார், தொடர்ந்து தனியார்

மருத்துவனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி கடந்த 03.01.2021ல் இறந்துள்ளார்.

விபத்து நடந்துள்ள சமயத்தில், மேற்படி சின்னம்மாளிற்கு 73 வயதாகி உள்ளது. அவர் பால்வியாபரம் செய்து மாதம் ரூ.15,000/- வருமானம் பெற்றுள்ளார். மேற்படி விபத்து தொடர்பாக, வாணியம்பாடி தாலுக்கா காவல் நிலையத்தில் குற்ற எண்.1186/2020 ல், இ.த.ச.பிரிவுகள்.279,337 ன்கீழ் டிராக்டர் ஓட்டுநர் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி விபத்தை ஏற்படுத்திய டிராக்டருக்கு 1ம் எதிர்மனுதாரர் உரிமையாளர் ஆவார். விபத்து சமயத்தில் மேற்படி வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. விபத்தானது டிராக்டர் ஓட்டுநரின் அதிவேகம், கவனக்குறைவு, அஜாக்கிரதையால் ஏற்பட்டுள்ளதால், இறந்துள்ள சின்னம்மாள் என்பவரது இறப்பிற்கு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகையாக, மனுவில் குறிப்பிட்டுள்ள பல்வேறு தலைப்புகளில் மொத்தம் ரூ.25,00,000/-ஐ எதிர்மனுதாரர்கள் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

விபத்தில் இறந்துள்ள சின்னம்மாள் என்பவருக்கு மனுதாரர்கள் அனைவரும் மகன்கள் மற்றும் மகள்கள் என்ற உறவு முறை ஆகின்றனர். ஆகையால், மேற்படி மனுவில் கூறப்பட்டுள்ள மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகையை, எதிர்மனுதாரர்களிடமிருந்து பின் வட்டியுடன் பெறுவதற்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>03) 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :</u>**

மனுச் சங்கதிகள் பொய்யானவை, சட்டப்படியும், மனுவிற்கான சங்கதிகளின்படியும் நிலைக்கக்கூடியதல்ல. 2ம் எதிர்மனுதாரர் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர, மற்றவற்றை தகுந்த முறையில் மனுதாரர்கள் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளனர்

மனுவில் கூறப்பட்டுள்ள விபத்து தொடர்பான விவரங்களை 2ம் எதிர்மனுதாரர் மறுக்கிறார். பல்வேறு தலைப்புகளில் மனுதாரர்கள் முன்வைத்துள்ள இழப்பீட்டு தொகை மற்றும் வட்டி விகிதம் சட்டத்திற்கு புறம்பானதாகும்.

விபத்து சமயத்தில் TN 23 BX 8271 என்ற பதிவு எண் கொண்ட டிராக்டரை 1ம் எதிர்மனுதாரர் மிதமான வேகத்தில் ஓட்டிசென்றுள்ளார். அச்சமயம் விபத்தில் இறந்துள்ள சின்னம்மாள் மேற்படி டிராக்டர் வருவதை கவனிக்கமால், திடிரென ரோட்டின் குறுக்கே வந்துள்ளதால், டிராக்டர் மீது மோதி தன்னிச்சையாக விபத்தை ஏற்படுத்தியுள்ளார்.

விபத்திற்கு மேற்படி சின்னம்மாள் முழு பொறுப்பாளி ஆவார். விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்களினால் அவர் இறந்துள்ளார் என்பதை தகுந்த மருத்துவ ஆவணங்கள் மூலம் மனுதாரர்கள் நிரூபிக்க கடமைபட்டுள்ளனர்.

மேற்படி சின்னம்மாள் இறந்துள்ளது தொடர்பாக உடற்கூராய்வு அறிக்கை தாக்கல் செய்யபடவில்லை. முதல் தகவல் அறிக்கையிலும் மாறுதல் செய்யபடவில்லை. விபத்து தொடர்பான விவரங்களை 1ம் எதிர்மனுதாரர் முறைப்படி 2ம் எதிர்மனுதாரருக்கு தெரிவிக்கவில்லை.

மனுதாரர்கள் இறந்துள்ள நபரின் வயது, தொழில், வருமானம் மற்றும் மருத்துவ ஆவணங்கள், மனுதாரர்களுக்கும், இறந்துள்ள நபருக்கும் இடையே உள்ள உறவுமுறை ஆகியவற்றை தகுந்தமுறையில் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளனர். எனவே, எவ்வகையிலும், விபத்திற்கு தொடர்பில்லாத 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

03) இம்மனுவினைப் பொறுத்த வரையில், மனுவில் கூறப்பட்டுள்ள விபத்திற்கு யார் காரணம்? என்பதும், மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள்

மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளனரா? அவ்வாறு எனில், மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகை எவ்வளவு? என்பதும் இந்நீதிமன்றத்தால் முடிவு காணவேண்டிய தீர்மானிப்பதற்குரிய பிரச்சனை ஆகும்.

04) மனுதாரர்கள் தரப்பில் மனுவினை தாக்கல் செய்துள்ள 5ம் மனுதாரர் சண்முகம் என்பவர் ம.சா.1 ஆகவும், பழனி என்பவர் ம.சா.2 ஆகவும், மருத்துவர் காலிக்பாஷா என்பவர் ம.சா.3 ஆகவும் இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளனர். மனுதாரர்கள் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

06) மனுவினை எதிர்த்து வழக்காடியுள்ள 2ம் எதிர்மனுதாரர் தரப்பில், 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் நிர்வாக மேலாளராக பணிபுரியும் மிதுன்காந்தி என்பவர் எ.ம.சா.1 ஆக வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிர்வாதத்திற்கு ஆதரவாக எ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>07) பிரச்சனைக்குரிய தீர்வு :</u>

இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது. இருதரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞர்களால் தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துமூலமான வாதுரைகள் மற்றும் முன் தீர்ப்பு முடிவுகள் போன்றவை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மனுவில் கூறப்பட்டுள்ள சாலை விபத்தானது, வாணியம்பாடி தாலுக்கா நியு இந்திரா நகரில் உள்ள 1ம் எதிர்மனுதாருக்கு சொந்தமான டிராக்டர் செட் அருகில் நடைபெற்றுள்ளது.

கடந்த 17.11.2020 ம் தேதி, காலை 10.00 மணியளவில், மேற்படி இடத்தில், விபத்தில் இறந்துள்ள சின்னம்மாள் என்பவர் நடந்து சென்றுள்ளார். அச்சமயம், அவருக்கு பின்னால் TN 23 BX 8271 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரை, 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவுடனும் ஓட்டிக்கொண்டு வந்து, மேற்படி சின்னம்மாள் என்பவர் மீது மோதி, சாலை விபத்தை ஏற்படுத்தியுள்ளார்.

விபத்து காரணமாக, உடலில் பலத்த காயம் அடைந்துள்ள மேற்படி சின்னம்மாள் மருத்துவனையில் சிகிச்சை பெற்று, பின்னர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார் என மனுச் சங்கதிகள் அமைந்துள்ளன.

விபத்து நடந்துள்ள சமயத்தில், விபத்தில் தொடர்புடைய இடத்தில், விபத்தில் இறந்துள்ள சின்னம்மாள் என்பவர் நடந்து சென்றுள்ளார் என்ற சங்கதியும், விபத்தில் TN 23 BX 8271 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் தொடர்புடையது என்ற சங்கதியும், 2 எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவொரு மாறுபாடுமின்றி உண்மையென ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

விபத்தில் தொடர்புடைய TN 23 BX 8271 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் ஓட்டுநருக்கு எதிராக, வாணியம்பாடி தாலுக்கா காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் நகல், மனுதாரர்களால் ம.சா.ஆ.1 ஆக வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆவணத்தில் விபத்து டிராக்டர் ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவினால் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ1 முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக

பதிவு செய்யபட்டுள்ளது மனுதாரர்கள் தரப்பு வழக்கிற்கு எதிரானதாக உள்ளது என 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வாதம் செய்யபட்டுள்ளது.

விபத்து நடந்துள்ள தேதிக்கு பின் சுமார் 15 நாட்கள் கழித்து, காலதாமதமாக ம.சா.ஆ1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபட்டுள்ளது உண்மையாகும். ஆனால் அதில், மேற்படி சின்னம்மாளுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதில் உதவியாக இருந்துள்ள காரணத்தினால் உடனடியாக புகார் அளிக்க இயலவில்லை என முதல் தகவல் அறிக்கைகான புகாரை கொடுத்துள்ள 5ம் மனுதாரர் சண்முகம் என்பவர் குறிப்பிட்டுள்ளது சட்டப்படி ஏற்புடையது ஆகும்.

மனுவில் கூறப்பட்டுள்ள விபத்தினை நேரில் கண்ணுற்ற சாட்சியாக மனுதாரர் தரப்பில் ம.சா.2 பழனி என்பவர் இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். ம.சா.2 பழனி விபத்தானது டிராக்டர் ஓட்டுநரின் அஜாக்கிரதை, கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதாக இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார்.

விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்களினால் மேற்படி சின்னம்மாள் இறக்கவில்லை என்றும், விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்களுக்கும் அவரது இறப்பிற்கும் இடையில் நேரிடையாக தொடர்பு உள்ளது என்பதை தகுந்த மருத்துவ ஆவணங்கள் மூலம் மனுதார்கள் இவ்வழக்கில் நிருப்பிக்க தவறியுள்ளனர் என 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வாழக்காடபட்டுள்ளது.

விபத்திற்கு பின் மேற்படி சின்னம்மாள் வாணியம்பாடியில் உள்ள விஜயா ஆர்தோ கேர் மருத்துவனையில் அனுமதிக்கபட்டுள்ளார் என்பதை மேற்படி மருத்துவனையில் வழங்கபட்டுள்ள ம.சா.ஆ7 மருத்துவ அறிக்கை மூலம் கண்டறிந்து கொள்ளமுடிகிறது.

பின்னிட்டு, கடந்த 24.11.2020ல் மேற்படி சின்னம்மாள், வாணியம்பாடி அரசு மருத்துவனையில் சிகிச்சை பெற்றுள்ளார் என்பதை ம.சா.ஆ.8 விபத்து

பதிவேட்டு ஆவணம் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. அதன்பின், வாணியம்பாடி ரப்பா மருத்துவனையில் அவர் சிகிச்சை பெற்றுள்ளார் என்பதை, மேற்படி மருத்துவமனையிலிருந்து வழங்கபட்டுள்ள ம.சா.ஆ10 மருத்துவமனை வெளியேற்றுகை குறிப்பு ஆவணம் மூலம் கண்டறிந்து கொள்ளமுடிகிறது.

மேற்படி மருத்துவமனையில் இறந்துள்ள சின்னம்மாளுக்கு சிகிச்சை அளித்துள்ள மருத்துவர் காலிக்பாஷா என்பவர் இந்நீதிமன்ற சாட்சி அழைப்பாணை மூலம் ம.சா.3 ஆக இவ்வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் விசாரணை செய்யபட்டுள்ளார்.

விபத்து நடந்துள்ள தேதிக்கு பின்னர் சுமார் 45 நாட்கள் கழித்து கடந்த 03.01.2021ல் மேற்படி சின்னம்மாள் இறந்துள்ளார் என்பது ம.சா.ஆ12 இறப்பு சான்றிதழ் மூலம் புலனாகிறது. விபத்திற்கு பின்னிட்டு தொடர் மருத்துவ சிகிச்சையில் இருந்துள்ள மேற்படி சின்னம்மாள், விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்களினால் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளதாக மனுதாரர்கள் வழக்கினை முன்வைத்துள்ளனர்.

மேற்படி சின்னம்மாளின் இறப்பு தொடர்பாக உடற்கூராய்வு அறிக்கை இவ்வழக்கில் தாக்கல் செய்யாத நிலையில், விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் அவர் இறந்துள்ளார் என கணக்கில் எடுத்துகொள்ள இயலாது என்று 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இந்நீதிமன்றத்தில் வாதிட்டுள்ளார்.

மேற்படி எதிர்வாதத்திற்கு பதில் அளிக்கும் வகையில் மனுதாரர்கள் தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞர் கீழ்கண்ட முன்தீர்ப்பு முடிவை இந்நீதிமன்றத்தின் பார்வைக்கு சுட்டிகாட்டியுள்ளார்.

**2014 (1) TN MAC Page 384**

**National Insurance Company limited Vs Anthony Alias Rakesh and others**

Merely because Post–Mortem Report not produced,it cannot be said that death had no nexus with injury particularly when death can be inferred from other materials – Contention that Claim petition liable to be dismissed as abated, held, unsustainable.

மேற்படி முன்தீர்ப்பு மனுதாரர்கள் தர்பபு வழக்கிற்கு ஆதரவாக உள்ளதால், இவ்வழக்கில் இறந்துள்ள சின்னம்மாளின் உடற்கூராய்வு அறிக்கை தாக்கல் செய்யாத காரணத்தினால், மனுதாரர்கள் தரப்பு வழக்கு பாதிப்படைந்துள்ளது என்ற 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிர்வாதத்தை இந்நீதிமன்றம் ஏற்கமறுத்து, அதனை நிராகரிப்பு செய்கிறது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 விபத்து தொடர்பான புலனாய்வு அறிக்கை இவ்வழக்கில் தாக்கல் செய்யபட்டுள்ளது. அதில் விபத்தினால் இறந்துள்ள சின்னம்மாளுக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது உண்மை என ஒப்புகொள்ளபட்டுள்ளது. மேலும், விபத்தினால் ஏற்படடுள்ள காயங்களினால் மேற்படி சின்னம்மாள் இறக்கவில்லைஎன குறிப்பாக மறுத்து எந்தவொரு அறிக்கை விவரங்களும் எ.ம.சா.ஆ 1 ஆவணத்தில் காணப்படவில்லை என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளகிறது.

இச்சூழ்நிலையில், மனுதாரர்கள் தரப்பில், இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சி, சான்றாவணங்கள் மூலமாக மனுவில் கூறப்பட்டுள்ள விபத்திற்கு டிராக்டர் ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணம் எனவும், விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்களினால் மேற்படி சின்னம்மாள் இறந்துள்ளார் எனவும், விபத்திற்கும் அவரது இறப்பிற்கும் இடையே நெருங்கிய நேரடி தொடர்பு உள்ளது என்றும் இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

விபத்தில் தொடர்புடைய டிராக்டரின் காப்பீட்டு பாலிசி நகல் ஆவணமான ம.சா.ஆ.4 ஆவணத்தில், மேற்படி வாகனத்தின் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் என காட்டப்பட்டுள்ளது. ம.சா.ஆ.4 ஆவணத்தில் மேற்படி வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு 08.12.2020ம் தேதி வரை காப்பீட்டு பாலிசி நடைமுறையில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, விபத்து நடந்துள்ள கடந்த 17.11.2020ம் தேதி, விபத்தில் தொடர்புடைய மேற்படி டிராக்டர் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு, காப்பீட்டு பாலிசி அமலில் இருந்துள்ளது என்ற உண்மையை தெரிந்துகொள்ள முடிகிறது.

விபத்தில் இறந்துள்ள சின்னம்மாள் என்பவருக்கு மனுதாரர்கள் அனைவரும் மகன்கள் மற்றும் மகள்கள் என்ற அடிப்படையில் சட்டப்படியான வாரிசுகள் என மனுவில் கூறபட்டுள்ளது. அது உண்மை என்பதை இவ்வழக்கில் குறியீடு செய்யபட்டுள்ள ம.சா.ஆ.13 வாரிசு சான்றிதழ் நகல் மூலம் கண்டறிந்து கொள்ளமுடிகிறது.

விபத்தில் இறந்துள்ள சின்னம்மாள் பால்வியாபாரம் செய்து மாதம் ரூ.15,000/-ம் வருமானம் பெற்றுள்ளார் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நிரூபிக்கும் பொருட்டு மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கில் எந்தவொரு சாட்சி, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில், இறந்துள்ள சின்னம்மாள் என்பவரது வயது, உடல் தகுதி ஆகியவற்றை கணக்கில் கொண்டு, மனுதாரர்களின் கூற்றின்படி, இறந்துள்ள சின்னம்மாள் என்பவர் மேற்படி வேலை செய்திருக்கும்பட்சத்தில், அவருக்கு மாத வருமானமாக ரூ.10,000/-

கிடைத்திருப்பதற்கு நடைமுறை சாத்தியக் கூறுகள் உள்ளது என இந்நீதிமன்றம் கணக்கில் கொள்கிறது.

மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தால், 2009(5) Law Weekly Page No. 561 (SC), Srimathi Sarala Varma And Othres /Vs/ Delhi Transport Corporation and another என்ற வழக்கில், விபத்தில் இறந்துள்ள நபர் திருமணமானவராக இருந்து, அவரை சார்ந்து இருப்போர் எண்ணிக்கை ஆறுக்கும் மேற்பட்டு இருக்கும் பட்சத்தில், மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயத்தால் நிர்ணயம் செய்யப்படும் பெயரளவு மாத வருமானத்தில், 1/5 பங்கினை, இறந்து போனவருடைய சொந்த மற்றும் வாழ்க்கை செலவினங்களுக்காக, கழித்துகொள்ள வேண்டுமென கூறப்பட்டுள்ள பொருண்மைகளை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

அதன்படி, இந்நீதிமன்றத்தால் ஏற்கனவே, நிர்ணயம் செய்யப்பட்டுள்ள இறந்துபோன சின்னம்மாள் என்பவரது எதிர்கால பெயரளவு மாத வருமானம் ரூ.10,000/- ல் இருந்து, 1/5 பங்கான ரூ.2,000/- ஐ கழித்து கொள்ளும் பட்சத்தில், இறந்துபோன சின்னம்மாள் என்பவருடைய எதிர்கால பெயரளவு மாத வருமானம் ரூ.8,000/- என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

மனுதாரர்கள் தனது மனுவில், இறந்துள்ள சின்னம்மாள் என்பவருக்கு 73 வயது என கூறியுள்ளார். மனுதாரர்கள் இவ்வழக்கில் குறியீடு செய்துள்ள ம.சா.ஆ.12 இறப்புச் சான்றிதழில் இறந்துள்ள சின்னம்மாள் என்பவருக்கு 73 வயது என குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுவினை எதிர்வழக்காடியுள்ள 2 எதிர்மனுதாரரால் இறந்துள்ள சின்னம்மாள் என்பவரது மேற்படி வயதை முரண்படுத்தும் வகையில் இவ்வழக்கில் எந்தவொரு சாட்சி, சான்றாவணங்களையும் முன்னிலைப்படுத்தவில்லை. ஆகையால், விபத்து நடைபெற்றுள்ள

சமயத்தில், விபத்தில் இறந்துள்ள சின்னம்மாளுக்கு 73 வயது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தால், 2009 (5) Law Weekly Page 561 Smt.Sarala Varma & others /Vs/ Delhi Transport Corporation and another என்ற வழக்கில், விபத்தில் இறந்துள்ள நபர், 66 வயது முதல் 70 வயதிற்குள் இருக்கும் பட்சத்தில், பெருக்கீட்டு எண் 5ஐ பயன்படுத்த வேண்டுமென்று கூறியுள்ள சட்ட பொருண்மையை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

விபத்து நடந்துள்ள சமயத்தில், விபத்தில் இறந்துள்ள சின்னம்மாள் என்பவருக்கு 73 வயது என ஏற்கனவே, இந்நீதிமன்றம் கணக்கில் கொண்டுள்ள நிலையிலும், அவரது எதிர்கால பெயரளவு மாத வருமானம் ரூ.8,000/- என நிர்ணயம் செய்துள்ள நிலையிலும், மேற்கூறிய முன் தீர்ப்பின் அடிப்படையில், பெருக்கீட்டு எண் 5-ஐ பயன்படுத்தும்போது, (ரூ.8,000x12x5) மொத்தம் ரூ.4,80,000/- தொகையானது, இறந்து போனவருடைய எதிர்கால பெயரளவு மாத வருமான இழப்பீடாக இந்நீதிமன்றத்தால் கணக்கீடு செய்யப்படுகிறது.

மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள 2017 (2) TN MAC Page 609 (SC), National Insurance Company Limited /Vs/ Pranay Sethy and Others என்ற வழக்கில், மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு வழக்கில், அன்பு, பாசம் ஆகியவற்றின் கூட்டு இழப்பீடாக ரூ.40,000/- மும், இறந்துபோனவரது ஈமக்கிரியை செலவிற்காக ரூ.15,000/- மும், சொத்து இழப்பீடாக ரூ.15,000/- மும் வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என கூறப்பட்டுள்ள பொருண்மையை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

அத்துடன், அன்பு, பாசம் ஆகியவற்றின் கூட்டு இழப்பீடு தொடர்பாக, சமீபத்தில் மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தால், 2020(2) MWN (Civil) 827 United India Insurance Company Limited /Vs/ Satinder Karur @

Satwinder Karur & Others என்ற வழக்கில் கூறப்பட்டுள்ள கீழ்க்கண்ட பொருண்மைகளை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

2020(2) MWN (Civil) 827

IN THE SUPREME COURT OF INDIA

C.A.No.2705 of 2020 (S.L.P.(C) No.28548 of 2014 with C.A.No.2706 of 2020 (S.L.P.(C) No.12520 of 2015) dated 30.06.2020

C.A.No.2705 of 2020

United India Insurance Co.Ltd., ... Appeallant

/Vs/

Satinder Karur @ Satwinder Karur & Others .... Respondents

C.A.No.2706 of 2020

Satinder Karur @ Satwinder Karur & Others .... Appellants

/Vs/

United India Insurance Co.Ltd., ... Respondent

9.7 Insofar as the Conventional Heads are concerned, the deceased Satpal Singh left behind a widow and three children as his Dependants. On the basis of the Judgments in Pranay Sethi (Supra) and Magma General (Supra) the following amounts are awarded under the Conventional Heads :

i. Loss of Eatate: Rs.15,000/-

ii. Loss of Consortium

(a) Spousal Consortium : Rs.40,000/-

(b) Parental Consortium : Rs.40,000 x 3 = Rs.1,20,000/-

iii. Funeral Expenses : Rs.15,000/-

மேலும், சமீபத்தில், மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றத்தால், 2019(2) TNMAC Page 371(SC) Joginder Singh & another /Vs/ ICICI Lombard General Insurance Co.Ltd., என்ற வழக்கில், கூறப்பட்டுள்ள கீழ்க்கண்ட பொருண்மைகளை, இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

2019 (2) TN MAC 371 (SC)

IN THE SUPREME COURT OF INDIA

C.A.No.6291 of 2019 (S.L.P.(C) No.34239 of 2015 dated 14.09.2021

Joginder Singh & another ... Appellants

/Vs/

ICICI Lombard General Insurance Co.Ltd., .... Respondent

MOTOR ACCIDENT CLAIM – Compensation – Quantum – Enhancement – Scope Loss of Love & Affection : Award of Rs.25,000 not proper : Rs.40,000 to be paid to each parent (Nanu Ram followed ) Enhanced to Rs.80,000/- Funeral Expenses : Reduced from Rs.25,000 to Rs.15,000/- Total Compensation enhanced by Rs.13,48,000/-.

ஆகையால், மேற்கூறியவாறு, இந்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ள, மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள, முன் தீர்ப்புகளின் அடிப்படையில், இறந்துபோனவரது அன்பு, பாசம் போன்றவற்றிற்காக கூட்டு இழப்பீடாக, மனுதாரர்கள் ஒவ்வொருக்கும் தலா ரூ.40,000/- தொகையும், இறந்துபோனவருடைய இறுதி சடங்கிற்காக ரூ.15,000/- மும், இறந்து போனவருடைய சொத்து இழப்பீடாக ரூ.15,000/- மும் மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக கூடுதலாக கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

அதன்படி, இம்மனுவில் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய, மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுத் தொகை, பின்வருமாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| எதிர்கால பெயரவு மாத வருமான மொத்த இழப்பீடு | ரூ. 4,80,000/- |
| அன்பு, பாசம் இழப்பிற்கான இழப்பீடு | ரூ. 2,80,000/- |
| இறுதி சடங்கிற்கான இழப்பீடு | ரூ. 15,000 |
| சொத்து இழப்பீடு | ரூ. 15,000 |
| மொத்தம் | ரூ. 7,90,000/- |

மேற்படி இழப்பீட்டு தொகை ரூ.7,90,000/- தொகை மனுதாரர்களுக்கு இம்மனுவில் விபத்து இழப்பீட்டு தொகையாக

கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டு, இம்மனு தொடர்பான பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

08) **முடிவில்,** இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு விபத்து இழப்பீடாக ரூ.7,90,000/- ஐ, 1, 2 எதிர்மனுதாரர்கள் ஆண்டு வட்டி 7.5% மற்றும் விகிதாச்சார செலவுத் தொகையுடன் சேர்த்து கணக்கிட்டு தனித்தனியாகவும், கூட்டாகவும் செலுத்த வேண்டுமென்றும், மேற்படி தொகைக்கு மனு தாக்கல் செய்த தேதி முதல் முழுத்தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை ஆண்டு வட்டி 7.5% கணக்கீடு செய்து செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மேற்படி, இழப்பீட்டு தொகையை சார்பு நீதிபதி, MACT, பாரத ஸ்டேட் வங்கி, வாணியம்பாடி கிளை, நடப்பு கணக்கு எண்.35967133396-ல் RTGS என்ற தலைப்பில் 2ம் எதிர்மனுதாரர் இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வைப்பீடு செய்ய வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

மேற்படி இழப்பீட்டு தொாகையில் 1, 5, 7 மனுதாரர்களுக்கு தலா 20% ஒதுக்கீடு செய்யபட்டும், 2, 3, 4, 6 மனுதாரர்கள் ஒவ்வொருக்கும் தலா 10 % ஒதுக்கீடு செய்யபட்டும், மேற்படி தொகை வைப்பீடு செய்யப்படும் பட்சத்தில், இழப்பீட்டு தொகையையும் அதற்கான வட்டியையும், சேர்த்து மனுதாரர்கள் உடனடியாக நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது.

தீர்வுத் தொகைக்கான நீதிமன்ற கட்டணம் ரூ. 7,273 /- என நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரர்கள் ஏற்கனவே செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.373/-ஐ கழித்து கொண்டு, மீதியுள்ள நீதிமன்ற கட்டணம் ரு.6,900/-ஐ உத்தரவு தேதியிலிருந்து 1 மாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீட்டு தொகைக்குரிய வட்டியையும், இம்மனுவின் உத்தரவு நகலையும்

மனுதாரர்கள் பெற முடியாது என உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்களின் வழக்கறிஞர் ஊதியம் ரூ.14,900/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.04.16 17:31:29 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை
தீர்ப்பாயர் மற்றும் சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :</u>**

ம.சா.1 – சண்முகம்

ம.சா.2 – பழனி

ம.சா.3 – மருத்துவர் காலிக்பாஷா

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| ஆவணங்களின் வரிசை எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 02.12.2020 | முதல் தகவல் அறிக்கையின் நகல் |
| ம.சா.ஆ.2 | -- | மாதிரி வரைபட நகல் |
| ம.சா.ஆ.3 | -- | TN 23 BX 8271என்ற பதிவவெண் கொண்ட டிராக்டரின் பதிவு புத்தக நகல். |
| ம.சா.ஆ.4 | -- | TN 23 BX 8271என்ற பதிவவெண் கொண்ட டிராக்டரின் காப்பீட்டு பாலிசி நகல். |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.5 | | TN 23 BX 8271என்ற பதிவவெண் கொண்ட டிராக்டரின் ஓட்டுநர் உரிமம் நகல். |
| ம.சா.ஆ.6 | -- | TN 23 BX 8271என்ற பதிவவெண் கொண்ட டிராக்டரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல். |
| ம.சா.ஆ.7 | -- | வாணியம்பாடி விஜயா ஆர்தோ கேர் மருத்துவமனை குறிப்பு |
| ம.சா.ஆ.8 | ---- | வாணியம்பாடி அரசு மருத்துவமனை விபத்து பதிவேட்டு நகல் |
| ம.சா.ஆ.9 | --- | வாணியம்பாடி அரசு மருத்துவமனை பரிந்துரை கடித நகல் |
| ம.சா.ஆ.10 | --- | வாணியம்பாடி ரப்பா மருத்துவமனை வெளியேற்றுகை குறிப்பு |
| ம.சா.ஆ.11 | --- | மருத்துவமனை பில். |
| ம.சா.ஆ.12 | -- | சின்னம்மாள் இறப்பு சான்று நகல் |
| ம.சா.ஆ.13 | -- | சின்னம்மாள் வாரிசு சான்று நகல் |
| ம.சா.ஆ.14 | | சின்னம்மாள் வாக்களார் அடையாள அட்டை நகல் |
| ம.சா.ஆ.15 | -- | மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டை நகல்கள் ( 7 எண்ணிக்கைகள்) |
| ம.சா.ஆ.16 | -- | மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தக நகல்கள். |
| ம.சா.ஆ.17 | | ஆம்புலன்ஸ் வாடகை ரசீதுகள். |

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :**</u>

எ.ம.சா.1 – மிதுன்காந்தி

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| ஆவணங்களின் வரிசை எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | -- | புலனாய்வு அறிக்கை |

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.04.16 17:31:46 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை
தீர்ப்பாயர் மற்றும் சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.